


**02. 08. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. விவசாயிகளின் நலத்தில் மத்திய அரசின் அர்ப்பணிப்பிற்கு வேளாண் நிதியுதவி திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

2. வேளாண் பெருமக்களின் நலன்களில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளப்பட மாட்டாது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் உறுதிபட தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் சென்றஆண்டு 18 ஆயிரத்து 900 உறுப்புதானங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சாதனை எட்டப்பட்டிருப்பதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறினார்.

4. தமிழக மக்கள் நலன்காக்கும் சிறப்பு மருத்துவ திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி போட்டிக்கு ராம்குமார் ராமநாதன், சந்திரசேகர் இணை முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைத்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் 9 கோடியே 70 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வேளாண் நிதியுதவி திட்டத்தின் 20-வது தவணையான, 20 ஆயிரத்து 500 கோடி ரூபாயை இன்று விடுவித்து பேசிய பிரதமர், ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் வெற்றிக்கு பின்னர், தாம் முதல்முறையாக காசிக்கு வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றி 140 கோடி இந்திய மக்களின் வலிமைக்கு சான்றாகும் என்று புகழாரம் சூட்டினார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் போது இந்தியாவின் தற்சார்பு ஆற்றலை உலகமே கண்டு வியந்ததாக பெருமிதம் தெரிவித்த அவர், வருங்காலங்களில் பிரம்மோஸ் ஏவுகணைகளும் ஆயுத தளவாடங்களும் எதிரிகளை அழிக்கும் என்றார்.

விவசாயிகளின் நலத்தில் மத்திய அரசின் அளப்பறிய சேவைக்கு வேளாண் நிதியுதவி திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று கூறிய பிரதமர், விவசாயிகளின் அனைத்து பிரச்சனைகளுக்கும் சுமூக தீர்வை எட்ட கடந்த 10 ஆண்டுகளாக தமது தலைமையிலான அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

பிரதமரின் வோளண் நிதியுதவி திட்டத்தின் கீழ் இதுவரை 3 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

விவசாகளுக்கான உணவு தானிய பெருக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தன்தானிய திட்டத்தை மத்தியஅரசு அறிமுகம் செய்துள்ளதாக கூறிய அவர், 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், சிறிய மாவட்டங்களின் வளர்ச்சி இதன்கீழ் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்.

பருவநிலை மாற்றங்களால் பாதிக்கப்படும் விவாசயிகளுக்கு பிரதமரின் பயிர்காப்பீடு திட்டத்தின்கீழ் ஒருலட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வேளாண் வளர்ச்சி உத்தரவாத திட்டத்தின் கீழ் ஒருலட்சத்து 25 ஆயிரம் கோடி விவசாயிகளிடம் மத்தியஅரசு நேரடியாக கலந்துரையாடி தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியிருப்பதாக எடுத்துரைத்தார்.

உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு அனைவரும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்ட பிரதமர், வரும் பண்டிகை காலங்களில் உள்ளூர் பொருட்களை வாங்கி பயன்படுத்த மக்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், சுற்றுலா, கலாச்சாரமுக்கியத்துவம், சாலை இணைப்புகள், மக்களின் வாழ்க்கைதர மேம்பாட்டு திட்டங்களை பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர் தொடர்ச்சி</u>

தூத்துக்குடி மாவட்டம் வாகைகுளம் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள வேளாண் மையத்தில் பிரதமரின் உரையை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

தர்மபுரி, செங்கல்பட்டு, திருச்சி, தென்காசி, திருவள்ளூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் வேளாண் நிதியுதவி தங்களது வங்கி கணக்குகளில் வந்து சேர்ந்துள்ளதாக மகிழ்ச்சியையும் நன்றிகளையும், தெரிவித்துக்கொண்டனர்.

தஞ்சை, திருவண்ணாமலை, தேனி மாவட்ட விவசாயிகள் தங்களது மகிழ்ச்சியை எமது செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>ஷிவ்ராஜ் சிங் சௌஹான்</u>

வேளாண் பெருமக்களின் நலன்களில் எவ்வித சமரசத்தையும் மத்திய அரசு செய்துகொள்ளாது என்று மத்திய வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் உறுதிபட தெரிவித்துள்ளார்.

பீஹார் மாநிலம் பாட்னாவில் வேளாண் நிதியுதவி திட்ட பணபரிவர்த்தனை நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், விவசாயிகளின் நலனே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை முன்னெடுத்துச் செல்ல சந்தை சலுகை திட்டங்களை மத்திய அரசு வழங்கியுள்ளதோடு, தேவையான போக்குவரத்து மற்றும் தளவாட வசதிகளை அரசு செய்து கொடுத்திருப்பதாக கூறினார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க கடனுதவி, மலிவு விலையில் உரங்கள், தரமான விதைகள் போன்றவற்றை அரசு வழங்குவதாகவும் எடுத்துரைத்தார்.

விவசாயிகளுக்கு வேளாண் கடன் அட்டைகள் மூலம் குறைந்த வட்டியில் 25 லட்சம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

ஊட்டச்சத்து மிக்க தாமரை விதைகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய மக்கானா வாரியம் உருவாக்கப் பட்டிருப்பதையும் அமைச்சர் திரு.ஷிவ்ராஜ்சிங் சௌஹான் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

ஜே.பி. நட்டா

நம்நாட்டில் சென்ற ஆண்டில் 18 ஆயிரத்து 900 உறுப்புதானங்கள் நடைபெற்று புதிய சாதனை எட்டப்பட்டிருப்பதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 15-வது உறுப்புதான தின நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் மூலம் 2023-ம் ஆண்டு 3 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உறுப்பு தானம் செய்ய உறுதிபூண்டதாக குறிப்பிட்டார்.

உறுப்புகளை தானம் செய்தோரின் குடும்பத்தினருக்கும், பயனடைந்தோருக்கும் அமைச்சர் தமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக பொதுமக்கள் நலன்காக்கும் சிறப்பு மருத்துவ திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

தமிழகத்தில் உள்ள கடைக்கோடி மக்களும் மருத்துவ சேவையை முழுமையாக பெறுவதை நோக்கமாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களில் அப்பகுதி அமைச்சர்கள் இம்முகாமை துவக்கிவைத்தனர்.

இந்த திட்ட முகாமில் பங்கேற்ற மக்களுக்கு மருத்துவம் சார்ந்த உதவிகளும் வழங்கப்பட்டன.

இந்த திட்டத்தை திருச்சி தில்லைநகர் கி.ஆ.பெ.விஸ்நாதம் பள்ளியில் மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.

மக்கள் இந்த முகாம்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ராணிப்பேட்டையில் அமைச்சர் திரு. ஆர்.காந்தி, அரியலூரில் திரு. எஸ். எஸ். சிவசங்கர், தூத்துக்குடியில் திருமதி. கீதாஜீவன் உள்ளிட்டோர் மருத்துவ முகாம்களை தொடங்கிவைத்தனர்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் ஆயிரத்து 256 முகாம்களில் பொதுமக்களுக்கு உயர்மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்படவுள்ளன.

காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும் இம்முகாமில் நீரிழிவு, உயர் ரத்தஅழுத்தம், மனநலம், கண் மருத்துவம், தோல் சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், கர்ப்பவாய் புற்றுநோய் உள்ளிட்ட 17 வகை சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

## தீரன் சின்னமலை

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் சென்னை கிண்டி தொழில்பேட்டை வளாகத்தில் அன்னாரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖

## ஆடிப்பெருக்கு

ஆடிப்பெருக்கு விழா நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி காவிரி பாயும் மாவட்டங்களில் முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன.

திருச்சி, தஞ்சை, உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் காவிரி ஆற்றில் வெள்ளம் ஆர்ப்பரித்து ஓடுவதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆடிப்பெருக்கை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு சந்தையில் வாழைத்தார் விற்பனை களைகட்டியுள்ளது.

தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வாழைத்தார்கள் இங்கு விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்

.. வாய்ஸ் ..

அதேபோல் நிலக்கோட்டை மலர்சந்தையிலும் பூக்கள் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

உள்ளூர் சந்தைக்காக அதிகளவில் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

## வானிலை

தென்தமிழக கடலோர பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நாளை கோவை, நீலகிரி, கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும்,

தேனி தென்காசி சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், நாகை, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

லெக்சிங்டன்னில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி போட்டிக்கு ராம்குமார் ராமநாதன், சந்திரசேகர் இணை முன்னேறியுள்ளது.

அரையிறுதியில் இந்த இணை அமெரிக்காவின் பிரனவ், ஆஸ்திரேலியாவின் பியர்சன் இணையை தோற்கடித்து இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

லண்டன் ஓவலில் இங்கிலாந்திற்கு எதிரான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 2-ம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 75 ரன் எடுத்திருந்தது.

ஜெய்ஸ்வால் 51 ரன்னுடனும்,

ஆகாஷ்தீப் 4 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் இந்தியா 224

இங்கிலாந்து 247

3-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖